# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## MCOP.No. 167/2021

| | | |
|---|---|---|
| Name | : | திரு. அந்தோணி சின்னப்பன் **Rw1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of July 2025.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 1ம் எதிர்மனுதாரர் ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 5 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) எனது ஓட்டுநர் உரிமத்தின் நகல் எ.ம.சா.ஆ. 1 ஆகும். 2) 23.09.2021ம்தேதி 1ம்எதிர்மனுதாரர் அவர் மீது பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கில் மனு விசாரணைக் கேட்டு உயர் அதிகாரிகளிடம் கொடுத்த புகார் மனுவின் நகல் எ.ம.சா.ஆ.2 ஆகும். 3)

1ம்எதிர்மனுதாரர் விபத்து சம்பந்தமாக இழப்பீடு கேட்டு மாண்புமிகு தென்காசி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்த MACOP No. 368/2022 மனுவின் அலுவலக நகல் எ.ம.சா.ஆ. 3 ஆகும். 4) மேற்படி விபத்து சம்பந்தமாக எதிர்மனுதாரர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ குறிப்புகளின் நகல் எ.ம.சா.ஆ. 4 ஆகும். 5) 1ம் எதிர்மனுதாரரின் ஆதார் அடையாள அட்டையின் நகல் எ.ம.சா.ஆ.5 ஆகும். மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என் கேட்டுக்கொள்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து ஏற்படுத்திய TN-72-BL-7164 என்ற வாகனத்தை நான்தான் ஓட்டினேன் என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில் வடக்கிலிருந்து தெற்குநோக்கி சென்றேன். மனுதாரர் எனக்கு எதிரே வந்தார் என்றால் சரிதான். விபத்து நடந்த இடமானது வளைவான பகுதி என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக போலீசார் என் மீது தான் குற்ற வழக்கு பதிவுசெய்து, ஆலங்குளம் நீதிமன்றத்தில் STC No. 1229/2022 ஆக நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். விபத்து நடந்த இடமானது வளைவான பகுதி என்பதால் வேகத்தை கட்டுப்படுத்த இயலாமல் நான் மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கு இன்சூரன்ஸ் உள்ளது. எனது இன்சூரன்ஸ் கம்பெனி மனுதாரருக்கு இழப்பீடு வழங்குவதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது என்றால் சரிதான். என்னால் விபத்து ஏற்பட்டுள்ள காரணத்தினால் நானும் எனது காப்பீடு நிறுவனமும் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi